විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව

ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

පරපුරක අභිමානය தலைமுறையொன்றின் பெருமிதம் Pride of a Generation

| | | |
|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. } ஓய்வூதிய அறிவுறுத்தல் கடித இல: 02/2023 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. } .......................... | දිනය<br>திகதி<br>Date } 2023.02. |

அனைத்து வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள் ,

**<u>கடற்படை கப்பல்கள் மற்றும் கடல் பாதுகாப்பு சேவையில் பணியாற்றும் பொது சேவையின் ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குதல்</u>**

2018.06.20 ஆம் திகதிய 01/2018 ஆம் இலக்கம் ஓய்வூதியச் சுற்றறிக்கைகளின் பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. கடல் பாதுகாப்பு சேவைக்காக அல்லது கப்பல்களில் சேவைக்காக நாட்டை விட்டு வெளியேறும் ஓய்வூதியம் பெறுவோர், அவர்கள் புறப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்திற்கு தமது உயிர் வாழ்ச் சான்றிதழை சமர்ப்பிக்க முடியும். அவ்வாறு இல்லையாயின், அவர்கள் தரையிறங்கிய நாட்டிலுள்ள இலங்கையின் வெளிநாட்டுத் தூதரகத்தினாலோ அல்லது வர்தகக் கப்பல் செயலகத்தினாலோ சான்றளிக்கப்பட்ட அவர்களின் உயிர் வாழ்ச் சான்றிதழை பிரதேச செயலகத்திற்குச் சமர்ப்பிக்க முடியும். அத்தகைய நபர் உரிய காலத்திற்குள் உயிர் வாழ்கச் சான்றிதழை சமர்ப்பிக்கத் தவறினால், அவரது ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட வேண்டும் என்துடன் ஓய்வூதியர் பிரதேச செயலகத்திற்குச் சென்று உரிய உயிர் வாழ்ச் சான்றிதழை சமர்ப்பித்த பின்னரே கொடுப்பனவுகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

03. தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் ஓய்வூதியர்களுக்கு, அவர்கள் புறப்பட்ட நாள் தொடக்கம் திரும்பும் நாள் வரையிலான காலகட்டத்திற்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவாக ரூ.2000/- மட்டுமே வழங்க முடியும். மேலும், வெளிநாட்டில் செலவிட்ட காலத்திற்கு ரூ.5000/- கொடுப்பனவு செலுத்த முடியாது. கடல் பாதுகாப்பு சேவைக்காகவோ அல்லது கப்பல்களில் சேவைக்காகவோ நாட்டை விட்டு வெளியேறும் ஓய்வூதியர்களுக்கும் இந்த விதிகள் பொருந்தும்.

04. எனவே, மேற்கண்ட அறிவுறுத்தல்களின்படி கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான பணிகளைச் செய்யும் அலுவலர்களுக்குத் அறிவுறுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**ஒப்பம்./ஏ.ஜகத் டீ.டயஸ்**
ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

**பிரதிகள்:**

1. செயலாளர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த
2. செயலாளர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு – த.த.த

මාළිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை கொழும்பு 10. Maligawatta, Colombo 10.
Hot line: 1970, Direct line: 2209800, Fax: 2342078, Email: info@pensions.gov.lk, Web: www.pensions.gov.lk